2026

பராபவ வருடம்
பங்குனி – சித்திரை மடல்

# நட்பேடு



*Magazin der Freunde ✽ Magazine of Friends*

ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் *e.V* , ஜெர்மனி





Our association Stuttgart Tamil Sangam e.V is a non-profit, non-sectarian, cultural and social organization with the aim of bringing together all those interested in the cultural and linguistic heritage of Tamil.

The main objective of our association is to promote the Tamil language, tradition and heritage in Germany. To achieve this, we embark on a journey by organizing and conducting various educational programs and traditional events.

In addition, we want to pass on our Tamil culture and customs to fellow human beings here in Germany and make them known to each other as well as invite them to work together. Our association will be a home for all cultures and provide everyone the opportunity to present their talents and thereby motivate others. Furthermore it is important that our children get to know the Tamil culture as well as our tradition.

Our association also offers the opportunity to network with other organizations, with the goal of exchanging ideas and learning new things from each other.

| Contents | Page No. |
|---|---|
| குறள் பேசும் பாடம் | 4 |
| ஒளி பரவட்டும் | 5 |
| கதை கதையாம் காரணமாம் | 6 |
| ஊர்க்குருவி | 7 |
| கார்டோஃபெல்பஃபர் -ஜெர்மனியின் எளிய சுவை | 9 |
| நல்ல தூக்கத்துக்கான 11 எளிய வழிகள் | 11 |
| Historical Highlights | 13 |
| கிறுக்கல்கள் | 14 |
| ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V – தமிழ்ப் பள்ளி | 15 |
| மினி-மூவ்ஸ் | 17 |
| Indo-German Fashion Fusion: Where Tradition Meets Modern Minimalism | 18 |
| அக்கம் பக்கம் | 19 |
| அறிந்ததில் அறியாதது | 21 |
| கீற்றல்கள் | 22 |
| Wildlife Wonders Around the World | 23 |
| Short and Easy German Sentences | 24 |
| பதில் தேடி விளையாடு | 26 |
| நிழற்பதிவு | 27 |
| Earning in the crypto world | 28 |
| சொல்லுங்கள் வெல்லுங்கள்! | 31 |
| இறுதியல்ல.., நிறைவு | 32 |

# குறள் பேசும் பாடம்

குறள் 596
பால்: பொருட்பால்
இயல்: அரசியல்
அதிகாரம்: ஊக்கமுடைமை

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து**




**விளக்கம்:**
**எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ் வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.**

**English Translation:**
**All we think about is the highest, and even if we cannot achieve that highest, we should not stop thinking about it.**

**Deutsche übersetzung:**
**Wir denken nur an das Höchste, und selbst wenn wir dieses Höchste nicht erreichen können, sollten wir nicht aufhören, darüber nachzudenken**



# ஒளி பரவட்டும்



அன்புடைய வாசகர்களுக்கு,
புனித ரமலான் நிறைவு பெற்றதையொட்டி எங்கள் இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதே நேரத்தில், அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகளையும் மனமார உரைக்கிறோம்.

புதிய ஆண்டின் முதல் இதழை உங்கள் கைகளில் வழங்கும் இந்தத் தருணத்தில், எங்களுக்குள் ஒரு சிறிய மகிழ்ச்சியும், அதே சமயம் ஒரு பெரிய பொறுப்புணர்வும் எழுகிறது. வேகமாக மாறிக் கொண்டிருக்கும் இந்த காலத்தில், நம்முடைய பண்பாட்டை வெறும் நினைவுகூர்வது மட்டும் போதாது என்று நாங்கள் நம்புகிறோம். அதை வாழ்வில் உணர்ந்து, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே இந்த இதழின் முக்கிய நோக்கமாகும்.

இந்த இதழின் சிறப்பு அதன் உள்ளடக்கத்தின் பல்வகைத் தன்மையில் இருக்கிறது. இது சிலர் மட்டும் எழுதும் இதழாக இல்லாமல், நம்முடைய சமூகத்தின் பல்வேறு குரல்கள் ஒன்றாக இணையும் ஒரு மேடையாக அமைந்துள்ளது. சிறார்களின் கற்பனையும், இளைஞர்களின் சிந்தனையும், பெரியோரின் அனுபவங்களும் இணைந்து இந்த இதழை முழுமைப்படுத்துகின்றன.

நம்முடைய வாழ்க்கை எவ்வளவு மாறினாலும், சில அடிப்படை மதிப்புகள் மாறாமல் தொடர்கின்றன. உடல்நலம், மன அமைதி மற்றும் உறவுகளின் மதிப்பு ஆகியவை அவற்றில் முக்கியமானவை. இந்த இதழில் உள்ள கட்டுரைகள் அவற்றை மெதுவாக நினைவூட்டும் ஒரு சிறிய முயற்சியாகவே அமைந்துள்ளன.

இந்தப் புத்தாண்டு அனைவருக்கும் புதிய தொடக்கங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையட்டும் என்று நாங்கள் நம்புகிறோம். சிறிய மாற்றங்களே வாழ்க்கையில் பெரிய பலன்களைத் தரும் என்பதிலும் நம்பிக்கை வைக்கிறோம். அந்த மாற்றப் பயணத்தின் ஒரு பகுதியாக இந்த இதழ் உங்களுடன் தொடரட்டும்.

வாசகர்களின் தொடர்ந்த ஆதரவும், அன்பும், பங்களிப்பும் தான் நட்பேடு இதழின் உண்மையான பலமாகும். எங்களுடன் இணைந்து இந்தப் பயணத்தை தொடர்ந்து அழகுபடுத்துவீர்கள் என்ற நம்பிக்கையுடன்...

**பதிப்பாளர்:**
**மஞ்சுபார்கவி சுகுமாரன்**



# கதை கதையாம் காரணமாம்

ஒரு இளைஞனுக்கு அதிகமாகக் கோபம் வந்து கொண்டே இருந்தது. ஒரு நாள் அவன் அப்பா அவனிடம் ஒரு சுத்தியலையும் நிறைய ஆணிகளையும் கொடுத்தார். "இனிமேல் கோபம் வரும்போதெல்லாம் வீட்டின் பின்சுவரில் ஆணி அடிக்குமாறு கூறினார்". முதல்நாள் 10 ஆணி, மறுநாள் 7, பின்பு 5, 2 என படிப்படியாக ஆணி அடிக்க அடிக்கக் கோபம் குறைந்தது. ஒரு நாள் ஒரே ஒரு ஆணி அடித்தான்.

மொத்தமாக 45 ஆணிகள் அடித்து உள்ளேன் இனி கோபம் வராது என அவன் அப்பாவிடம் கூறினான். இனிமேல் கோபம் வராத நாளில் ஒவ்வொரு ஆணியாகப் பிடுங்கி விடு என்றார்.

45 நாளில் அடித்த ஆணிகள் அனைத்தும் பிடுங்கப்பட்டு விட்டன என பெருமையுடன் அப்பாவை அழைத்துக் காட்டினான். உடனே அப்பா சொன்னார் ஆணிகளைப் பிடுங்கிவிட்டாய், சுவற்றில் உள்ள ஓட்டைகளை என்ன செய்வாய்? உன் கோபம் இது போலப் பலரைக் காயப்படுத்தி இருக்கும் அல்லவா? அந்த இளைஞன் வெட்கித் தலை குனிந்தான்.

நெறி:
கோபத்தில் சொல்வதும் செய்வதும் பிறரின் மனதில் ஆழமான காயங்களை ஏற்படுத்தும்; அதை பின்னர் சரி செய்வது கடினம். ஆகவே, கோபத்தைக் கட்டுப்படுத்தி யோசித்துச் செயல்பட வேண்டும்.

# ஊர்க்குருவி -9

## எது நடந்ததோ !



நண்பர் கேட்டார்
சில பத்தாண்டுகளுக்குப்
பின் சென்று எதையேனும்
மாற்ற முடியும் என்றால்
எதனை மாற்றுவாய் ?

சற்றும் சிந்திக்காமல்
“எதையுமில்லை" என்றேன் !
மாற்றும்படி எதுவும்
இல்லை எனில்
நடந்தவை எல்லாம்
நன்றாய் நடந்ததா ?
“ஆம்”-உம் இல்லை !
“இல்லை“-உம் இல்லை !!

நேற்றைய நாளில்
பாவம் இருந்தது
அதனால்
பகைமை இருந்தது !
காதல் இருந்தது
அதிலும்
காமம் இருந்தது !
பொய்மை இருந்தது
அதனில்
போதை இருந்தது !
ஆசை இருந்தது
அதுவும்
அதிகம் இருந்தது !

நேற்றைய நாளில்
அன்பு கிடைத்தது
அதுவும்
அளவின்றிக் கிடைத்தது !
உதவி கிடைத்தது
உலகை
உணரக் கிடைத்தது !
போதனை கிடைத்தது
பொதுமறை போற்றக் கிடைத்தது !
வழித்துணை கிடைத்தது வரியவனுக்கு
வாழ்வே கிடைத்தது !

# ஊர்க்குருவி -9

நட்பு கிடைத்தது
உலகின்
நாட்டம் கிடைத்தது !
பக்தி கிடைத்தது
எதிலும்
பரவசம் கிடைத்தது !

நேற்றைய நாளின்
நல்லதும் கெட்டதும்
இன்றைய என்னை
இயல்பாய் மாற்றியது !

கையில் கிடைப்பது
மலையோ கடுகோ
கையறு நிலையில்
வாழ்வோ சாவோ
கலங்காதிருக்கும் உடலை
கள்ளம் இல்லா மனதை
சிறகடிக்கும் இதயத்தை
சிந்திக்கும் அறிவை
நேற்றின் கவலையோ
நாளையில் பயமோ
இம்மியும் பாதிக்காத
இன்றைய நாளை

குளத்தில் விழுந்த கல்லாய்
மரத்தில் உதிர்ந்த இலையாய்
கிழக்கில் உதிர்த்த கதிராய்
மலையில் மலரும் மலராய்
எதையும் இயல்பாய்
எதிலும் நிறைவாய்
ஏற்கப்பணித்தது
நேற்றைய நாளின் அனுபவங்களே !!!

நேற்றை மாற்றும்
பேச்சும் இல்லை
நாளை குறித்த
பேராசையும் இல்லை !
எது நடந்ததோ அது
நல்வழி நடக்க நடந்தது !
எது நடக்கிறதோ அது
நல்வழி நடத்திச் செல்கிறது !!
எது நடக்குமோ அது
நான்முகன் கையில் இருக்கிறது !!!



**என்றும் அன்புடன்**
**மெய்யரசு நடராஜன்**




WHY US?

- Germany's first AI-powered dental monitoring system.
- 3D scans & digital diagnostics for precision and clarity.
- In-house dental lab – faster, more accurate results.
- Multilingual, culturally aware team.
- Personal consultation & transparent treatment – always.

# WEISS32

PLATINUM SPONSOR ★★★★★

WEISS32 ZAHNZENTRUM IS A LEADING DENTAL CENTER IN STUTTGART, COMMITTED TO PROVIDING WORLD-CLASS DENTAL CARE, ADVANCED TREATMENTS, AND RADIANT SMILES.WE COMBINE TECHNOLOGY, EXPERTISE AND EMPATHY TO PROVIDE FAMILIES WITH CARE BUILT ON TRUST, TRANSPARENCY, AND COMFORT.

+49 (0) 711 / 76 02 69 | info@weiss32.de | www.weiss32.de



# கார்டோஃபெல்பஃபர் -ஜெர்மனியின் எளிய சுவை

“கார்டோஃபெல்பஃபர்” ஜெர்மனியின் பாரம்பரிய தெரு உணவுகளில் ஒன்றாகும். இது கிறிஸ்துமஸ் சந்தைகள் மற்றும் திருவிழாக்களில் அதிகமாகக் காணப்படும் பிரபலமான உணவு.

வெளியில் மொறுமொறுப்பாகவும், உள்ளே மென்மையாகவும் இருப்பது இதன் தனிச்சிறப்பு. இனிப்பு அல்லது காரச் சுவையுடன் பரிமாறப்படும் இந்த உணவு, ஜெர்மன் “comfort food” எனப் போற்றப்படுகிறது.

---

**தேவையான பொருட்கள்:**

- 4 உருளைக்கிழங்கு (துருவியது)
- 1 சிறிய வெங்காயம் (நறுக்கியது அல்லது துருவியது)
- 1 முட்டை
- 2–3 மேசைக்கரண்டி மைதா மாவு
- உப்பு தேவைக்கு
- மிளகு தூள் (விருப்பம்)
- பொரிக்க எண்ணெய்

**செய்முறை:**

- உருளைக்கிழங்கை தோல் சீவி துருவி, அதிலுள்ள நீரை சுத்தமான துணி அல்லது கையால் பிழிந்து அகற்றவும்.
- அதில் வெங்காயம், முட்டை, மாவு, உப்பு மற்றும் மிளகு சேர்த்து நன்றாகக் கலக்கவும்.
- ஒரு கடாயில் எண்ணெயைச் சூடாக்கவும்.
- கலவையை சிறு உருண்டைகளாக எடுத்துத் தட்டையாக வடிவமைக்கவும்.
- இருபுறமும் பொன்னிறமாக மொறுமொறுப்பாக பொரிக்கவும்.
- எண்ணெய் வடிகட்ட காகிதத்தில் வைத்து எடுக்கவும்.

**பரிமாறும் முறை:**

சூடாக ஆப்பிள் சாஸ் அல்லது புளிப்பு கிரீம் உடன் பரிமாறினால் மிக சுவையாக இருக்கும்.



**“தூக்கம் என்பது ‘வாழ்க்கை’ என்ற மூலதனத்துக்கு நாம் செலுத்த வேண்டிய வட்டி; அதை புறக்கணித்தால், இயற்கை அதை கடுமையாக வசூலிக்கும்”**
-ஆர்தர் ஷோபென்ஹாவர்

நல்ல தூக்கம் என்பது உடலுக்கும் மனதுக்கும் மிகவும் அவசியமானது. பலர் “நேரம் கிடைத்தால் தூங்குகிறேன்” என்று நினைத்தாலும், தூக்கத்தின் தரம் தான் முக்கியம். கீழே கொடுக்கப்பட்டுள்ள சில வழிமுறைகள் உங்கள் தூக்கத்தை மேம்படுத்த உதவும்.

# நல்ல தூக்கத்துக்கான 11 எளிய வழிகள்

1. ஒரே குறிப்பிட்ட நேரத்தில் படுக்கும் பழக்கம்
ஒவ்வொரு நாளும் ஒரே குறிப்பிட்ட நேரத்தில் படுக்கவும், எழவும் முயற்சிக்கவும். இது உடலின் இயல்பான கடிகாரத்தை (biological clock) சீராக வைத்திருக்க உதவும்.

2. அமைதியான சூழல்
படுக்கை அறை அமைதியாகவும், குளிர்ச்சியாகவும் இருக்க வேண்டும். அதிக ஒளி, சத்தம் போன்றவை தூக்கத்தைப் பாதிக்கும்.

3. இரவு பழக்கங்களை உருவாக்குங்கள்
படுக்கைக்கு முன் புத்தகம் படிப்பது, மெதுவான இசை கேட்பது போன்றவை மனதை அமைதியாக்கும்.

4. திரை (Screen) பயன்பாட்டை குறைக்கவும்
மொபைல், டிவி, லாப்டாப் போன்றவற்றை படுக்கும் முன் குறைந்தது 30 நிமிடங்களுக்குப் பயன்படுத்தாமல் இருக்கவும்.

5. இரவு உணவு எளிதாக இருக்கட்டும்
கனமான உணவு சாப்பிடாமல், லேசான உணவுகளை தேர்வு செய்யுங்கள்.

6. கஃபீன் மற்றும் மது தவிர்க்கவும்
காபி, டீ, மற்றும் மது போன்றவை தூக்கத்தைப் பாதிக்கும். குறிப்பாக இரவு நேரங்களில் தவிர்க்கவும்.

7. மன அழுத்தத்தைக் குறைக்கவும்
யோகா, மூச்சுப் பயிற்சி போன்றவை மனதை அமைதியாக்கும்.

8. தூக்கம் வந்தபின் மட்டுமே படுக்கவும்
படுக்கையில் நீண்ட நேரம் விழித்திருக்காமல், தூக்கம் வந்தபின் மட்டுமே படுக்கவும்.

9. நாள் தவறாமல் உடற்பயிற்சி
சிறிய அளவு உடற்பயிற்சி கூட இரவில் நல்ல தூக்கத்துக்கு உதவும்.

10. பகலில் அதிக நேரம் தூங்க வேண்டாம்
நெடுநேர பகல் தூக்கம் இரவு தூக்கத்தைப் பாதிக்கும்.



# அம்மா என்ற ஒரு இடம்

எல்லாரும்
ஒரு காலத்துல
அம்மாவை எதிரியாகவே பார்த்திருப்போம்.
படிக்கச் சொன்ன குரல்,
வெளியே போகாதேன்னு பிடித்த கை,
“இப்போ புரியாது”ன்னு முடிச்சுவிட்ட வாக்கியம்
அவை எல்லாம்
ஒரு சிறைச்சுவர் மாதிரி தோன்றிய நாட்கள்.

ஆனா
வயசு கொஞ்சம் முன்னேறும்போது
அந்த சுவர்
ஒரு நிழலாக மாறி நிற்கிறது.
வெயிலில் தான் தெரியும்
நிழலின் அர்த்தம்.

ஒரு குழந்தை
முதல் வார்த்தை சொன்ன நேரமும்,
தடுமாறி முதல் அடி வைத்த நேரமும்,
அதை உலகம் கவனிக்காதிருந்தாலும்
அந்த நொடி
ஒரு இதயத்தில் அமைதியாகப் பதிந்திருக்கும்.

அடுப்பபரையின் முன் நின்ற கைகளில்
உணவு மட்டும் இல்லை;
அங்கே
ஒரு வாழ்க்கை சுவை பெறத் தொடங்குகிறது.
சமைக்கும் இடைவெளியில்
ஒரு பாடம்,
ஒரு நம்பிக்கை,
ஒரு மென்மையான திருத்தம்
கண்களுக்கு தெரியாமல் கலந்துவிடும்.

பல மாலைகளில்
ஒரு உருவம்
அதே இடத்தில் நின்றிருக்கும்.

கதவு திறக்கும் வரை
அசையாமல் காத்திருக்கும்
நேரம் நகரும்;
அவள் மட்டும் நகர மாட்டாள்.

ஒரு நாள்
அந்தக் குழந்தை
“பெரியவள்” என்று அழைக்கப்படும்.
உலகம் கைதட்டும்.
அம்மாவின் முகத்தில் சிரிப்பு இருக்கும்
அதற்குள்
சின்னதாய் மறைந்திருக்கும் கேள்வி:
“இனிமே அவளுக்கு
என்னோட நேரம் இருக்கும் தானே?”

எங்கெங்கோ போனாலும்
திரும்ப வரும்போது
ஒரு இடம் இருக்கிறது
சுவர் கொண்ட வீடு அல்ல,
நம்மை இன்னும் குழந்தையா பார்க்கும்
ஒரு இதயம்.
அதனால்தான்
எல்லாரும் சொல்கிறோம்
“என் அம்மாதான்
உலகத்திலே சிறந்த அம்மா” என்று.
அது உண்மைதான்.
ஏனெனில்
அம்மா என்பது
ஒரு உறவு மட்டும் அல்ல…
நம்மால் எப்போதும்
திரும்பிச் செல்ல முடியும்
ஒரு இடம்.

**- ஸ்வேதா**

# Historical Highlights

## HOW THE TRANSITION FROM PRINCELY STATES TO DEMOCRACY FORCED INDIA'S ROYAL ARTISTS INTO THE WORLD OF CELLULOID



Living in Europe, I face a lot of reverse culture shock. Whenever I mention a wedding happening in India, the immediate reaction, with wide eyes, is, "How 'bout the dance and music?"

Even in my marriage, there was no dance or music, and from where did this notion originate? Well, as you might have guessed, it's Indian cinema.

Why does Indian cinema alone have this song-and-dance culture, and what does it have to do with Britain?



## NO, NOT EVERY INDIAN WEDDING IS A MUSICAL: UNMASKING THE CINEMA BIAS

**Britain And The Entertainment:** India, as the British called it, was a large confederation of independentnations. If the British hadn't colonised it, it would have become a subcontinent similar to Africa. The kings and monarchs of pre-British India had to be constantly on their toes. With razor-thin competition and exhausted coffers, the kingdoms had a tighter budget for court entertainment

After the so-called traders of the English East India Company took over the reins of the Mughals, the infighting reduced to letters, sent to British officials complaining about neighbours. The surplus military budget now flooded the entertainment budget. Soon every kingdom had its own party of musicians, artists, dancers, etc, to entertain the now figurehead king.

The entertainment industry was further exaggerated by British Indian officials who wanted their own taste of the Orient. The entertainment bubble was soon to burst with the British leaving India in a hurry. After the partition of India, the once-mighty Indian kings were called princely states. The states now faced a grave danger of losing their kingdoms and joining a democracy

**Move to Cinema:** The kings now squeezed their purses, and the first to be stricken off the budget was the entertainment. The artists were now in a difficult situation with job loss. Some took wrong turns, while others were invited into the budding realm of Indian cinema. The artists, especially women, were the first to open the doors of entertainment to the public. The voices heard only by the rich now poured honey into the ears of the middle class. Gramophone recorders started the trend, and soon celluloid took it over

The royal king's entertainment party, once a staple of the Indian cinema industry, featured the same dance and music. Nascent Indian movies had 72 songs per movie (Google it :-)). Even dialogue had a rhythm to it, and music became part of every situation. Modern Indian cinema has reduced the number of music numbers per movie to 6–7, like the curry on the naan: you can't eat either without the other.

**-Karthik Nambi**



# கிறுக்கல்கள்

1. மன்னித்து விடு...
என் கண்கள் என்னை நச்சரித்ததால்
அவற்றை உன்னிடம் அனுப்பினேன்.
அவை உன் கண்களுடன் பேசிவிட்டு
உடனே திரும்பிவிடும் என்னிடம்.
கோபப்படாதே!💙

2. அந்த இளையராஜா இசை போல,
காலமென்றும் என்னுடன் நீ பிரியாத
வரம் வேண்டும்!❤️

3. அவளது ஒரு கண்ணால்
காயப்படுத்தினாள்,
மறு கண்ணால் குணப்படுத்தினாள்.
என்னவென்று சொல்ல அவளது
விழிகளை?
பார்வை ஒன்றே போதுமே!👀😍

*-Ramkumar Ramamoorthy*

# Stuttgart Tamil Sangam e.V. – தமிழ்ப் பள்ளி






தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள விரும்பும் புதிய மாணவர்களை எங்கள் கல்விக் குடும்பத்திற்கு அன்புடன் வரவேற்கிறோம்.

Tamil School Registration Process:

➡ Step 1: Online Sign-Up (இணையப் பதிவு)
எங்களது பதிவு இணைப்பிற்குச் சென்று தேவையான விவரங்களைப் பூர்த்தி செய்யவும். பதிவு செய்யும் போது தேவையான அனைத்து சான்றுகளையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
பதிவு இணைப்பு:
https://stuttgarttamilsangam.com/STSangam/studentSignIn

➡ Step 2: Trial Classes (மாதிரி வகுப்புகள்)
உங்கள் பதிவுக்குப் பிறகு தமிழ்ப் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர்கள் உங்களைத் தொடர்பு கொண்டு, மாதிரி வகுப்புகளுக்கான தேதிகளை அறிவிப்பார்கள். உங்கள் குழந்தை கற்றல் சூழலை அனுபவிக்க இது ஒரு சிறந்த வாய்ப்பு.



➡ Step 3: Final Enrollment (இறுதிச் சேர்க்கை)

மாதிரி வகுப்புகளுக்குப் பிறகு தொடர விரும்பினால், மாணவர்கள் தமிழ் மெய்நிகர்க் கழகத்தில் (TVA) அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்படுவார்கள். இதனுடன், உங்கள் குழந்தையின் தமிழ் கற்றல் பயணம் தொடங்கும்.



## நம் தலைமுறைகள் தமிழுடன் தழைக்கட்டும்!

EXPAT
VANTAGE

PLATINUM SPONSER

## You want to secure the financial future of your family here in Germany?



Expat Vantage specializes in helping expats build and protect their wealth with clarity and structure.

You get a financial framework that aligns your insurance, retirement planning, and investments including access to high-quality off-market opportunities into one coherent strategy, while helping you optimize your tax position.

A structured approach that brings clarity, confidence, and long-term security.

## WHY US?

**Tax optimization**
on average, you can save up to €8,000 in taxes

**Investments**
you gain access to exclusive off-market opportunities not typically available to the public

**Insurance solutions**
tailored to fit your overall financial strategy

**Experience**
you benefit from over 10 years in the German market

**Clarity**
the entire process is handled in English

**Freedom**
your consultation is free of charge

+49 (0) 151 12345678

info@expatvantage.de

www.expatvantage.de

நாம் ஜிம் செல்ல முடியாமல் இருந்தாலும், தினசரி வாழ்க்கையிலேயே உடற்பயிற்சியை சேர்க்கலாம். இதையே “மினி-மூவ்ஸ்” என்று அழைக்கலாம்

# “மினி-மூவ்ஸ்”
## – தினசரி வாழ்க்கையில் உடற்பயிற்சி சேர்ப்பது எப்படி?





2. **வீட்டு வேலைகளை சுறுசுறுப்பாக செய்யுங்கள்**
வேகமாக வேலை செய்தால் அது நல்ல உடற்பயிற்சியாக மாறும்.



1. **நடக்கும் பழக்கம்**
லிப்ட் பயன்படுத்தாமல் படிக்கட்டுகளை தேர்வு செய்யுங்கள்.



3. **காபி இடைவேளையில் இயக்கம்**
காபி குடிக்கும் போது சில ஸ்ட்ரெட்ச் பயிற்சிகள் செய்யலாம்.





4. **டிவி பார்க்கும் போது**
விளம்பர இடைவெளிகளில் ஸ்குவாட்ஸ் அல்லது ஜம்பிங் போன்ற பயிற்சிகளை செய்யலாம்.





5. **அலுவலகத்தில் சிறிய பயிற்சிகள்**
கணினி முன் நீண்ட நேரம் அமர்ந்திருப்பதைத் தவிர்க்கவும். ஒவ்வொரு 30 நிமிடத்திற்கும் எழுந்து சிறிது நடக்கவும்.

6. **வீட்டுப் பணிகளில் உடற்பயிற்சி**
தூய்மை செய்வது, தோட்ட வேலை செய்வது போன்றவை உடலை இயக்கும் சிறந்த வழிகள்.



7. **காலை 5 நிமிடங்கள்**
காலை எழுந்தவுடன் சில எளிய நீட்டிப்பு பயிற்சிகள் செய்யுங்கள்.
**படுக்கும் முன் பயிற்சி**
மெதுவான யோகா பயிற்சிகள் உடலை இலகுவாக்கும்.

# INDO-GERMAN FASHION FUSION: WHERE TRADITION MEETS MODERN MINIMALISM



1. Pattern with Precision: Intricate, heritage inspired floral motifs bring depth and cultural richness, while their structured, repetitive arrangement reflects a sense of clarity and order. The flowing silhouette adds softness and movement, balanced by a clean, minimal pairing that keeps the look grounded. This interplay of detailed pattern and disciplined design creates a style that feels both expressive and refined, where traditional Indian artistry meets modern European precision.



2. Flow Meets Form: A flowing, intricately printed dress brings movement and cultural richness, while a structured blazer adds sharpness and definition. Paired with clean, neutral tailoring, the look balances softness with precision. The interplay of fluid fabrics and refined silhouettes creates a style that feels both expressive and composed—where tradition meets modern clarity..

3. Casual with Culture: Everyday denim forms the foundation of this look, bringing ease and familiarity, while relaxed silhouettes and subtle ethnic influences add depth and character.



The styling remains clean and effortless, with soft layering and minimal detailing that echo a modern, urban sensibility. This balance of comfort and cultural nuance creates a look that feels both grounded and contemporary, where Indo Western aesthetics meet understated European influence.

INDO-GERMAN FASHION IS NOT JUST A TREND—IT IS A CULTURAL CONVERSATION. IT BLENDS STORYTELLING WITH STRUCTURE, COLOR WITH CLARITY, AND HERITAGE WITH INNOVATION.

# அக்கம் பக்கம்

# Indian Federation of Germany (IFG)




**Indian Federation of Germany (IFG)** என்பது ஜெர்மனி முழுவதும் உள்ள பல்வேறு இந்தியப் புலம்பெயர் சங்கங்களை ஒன்றிணைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு நாடு தழுவிய குடை அமைப்பாகும் (Dachverband). இது, ஜெர்மனியில் உள்ள தொழில் வல்லுநர்கள், மாணவர்கள் மற்றும் நீண்டகால குடியிருப்பாளர்கள் உட்பட சுமார் 300,000 இந்தியர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மையப்படுத்தப்பட்ட தளமாகச் செயல்படுகிறது. மேலும், இது ஜெர்மனி வாழ் இந்தியச் சமூகம், ஜெர்மன் நிறுவனங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்திற்கு இடையிலான இடைவெளியை இணைக்கிறது. கடந்த 27-மார்ச்-2026 அன்று மூனிக் (Muenchen) மாநகரில் இந்த அமைப்பு வெற்றிகரமாகத் துவக்கப்பட்டது !

**Indian Federation of Germany (IFG) என்றால் என்ன?**

**ஒன்றிணைக்கும் கட்டமைப்பு**: ஜெர்மனி முழுவதும் தனித்தனியாகச் செயல்பட்டு வரும் 100-க்கும் மேற்பட்ட இந்தியச் சங்கங்களின் சிதறலைக் கையாள்வதற்காக IFG உருவாக்கப்பட்டுள்ளது .

**கூட்டாட்சிக் கட்டமைப்பு**: பாடன்-வுர்ட்டெம்பர்க், பவேரியா, பெர்லின், ஹெஸ்ஸன் மற்றும் ஹாம்பர்க் ஆகிய இடங்களில் ஆரம்பகட்ட வலுவான தளங்களுடன், ஜெர்மனியின் 16 மாநிலங்களிலும் செயல்படும் IFG, பிராந்தியக் கிளைகள் உள்ளூரில் ஈடுபடவும், அதே நேரத்தில் ஒரே, நம்பகமான தேசம் தழுவிய குரலைப் பிரதிபலிக்கவும் உதவுகிறது.

**முக்கியத் தூண்கள்**: கொள்கை ரீதியான பரிந்துரை, இந்தியாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையே திறமையாளர்களுக்கான பாலமாகச் செயல்படுதல், ஒரு தேசிய வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் கூட்டாண்மை முயற்சிகளை ஊக்குவிப்பதிலும் IFG கவனம் செலுத்துகிறது.

**ஜெர்மனியில் உள்ள இந்தியர்களுக்கு Indian Federation of Germany (IFG) ஏன் முக்கியமானது?**

**ஒருங்கிணைந்த பரிந்துரை - Unified advocacy (கொள்கை மற்றும் புலம்பெயர்ந்தோர்)**: IFG, ஜெர்மன் நிறுவனங்களுக்கு முன்பாக ஒரு ஒற்றை, ஒருங்கிணைந்த குரலை வழங்குகிறது. இதன் மூலம், குடியேற்றம், தொழில் வாழ்க்கை மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பான இந்திய சமூகத்தின் கவலைகள் திறம்பட கவனிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

**Germany-India Talent Bridge** : ஜெர்மனியில் உள்ள திறமையான தொழிலாளர்களில் பெரும்பான்மையானோரும், சர்வதேச மாணவர்களின் மிகப்பெரிய குழுவும் இந்தியர்களாக இருப்பதால், இந்தத் திறமையாளர் குழுவிற்கும் ஜெர்மன் தொழில்துறைகளுக்கும் இடையே சிறந்த இணைப்பை IFG எளிதாக்குகிறது.

**மேம்படுத்தப்பட்ட இணைப்பு**: 100-க்கும் மேற்பட்ட இந்தியச் சங்கங்களை ஒன்றிணைப்பதன் மூலம், ஜெர்மனியில் அவர்கள் எங்கிருந்தாலும், இந்தியர்கள் ஆதரவைப் பெறுவதற்கும், தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்கும், கலாச்சார மற்றும் தொழில்முறை நிகழ்வுகளில் பங்கேற்பதற்கும் IFG எளிதாக வழிவகை செய்கிறது.

**முக்கிய உறவுகளை வலுப்படுத்துதல்**: முக்கிய உறவுகளை வலுப்படுத்துவதில் IFG ஒரு "நிரந்தரப் பாலமாக" செயல்படுகிறது. இது மக்களுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதோடு, இந்தியாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையிலான வளர்ந்து வரும் உறவு மற்றும் பொருளாதார கூட்டாண்மைக்கு ஆதரவளிக்கிறது.

# அறிந்ததில் அறியாதது

பழமொழி:

**“ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்”**



## தவறான புரிதல்:

ஆனை போல பெரியவர்களுக்கு ஒரு நல்ல காலம் வந்தால், பூனை போல சிறியவர்களுக்கும் அவர்களது வாழ்வில் ஒரு நல்ல காலம் வரும் என்று பொருள் கொள்ளப்பட்டது. இங்கே பெரியவர் என்பது உருவத்தால் மட்டுமல்லாமல், செல்வாக்கு, புகழ் ஆகியவற்றையும் குறிப்பதாகும். அதேபோல் சிறியவர் என்பது செல்வாக்கு, புகழ் எதுவுமே இல்லாத சாதாரண நிலையில் உள்ளவர்களைக் குறிப்பதாகும்.

## சரியான அர்த்தம்:

ஆநெய் = ஆ + நெய் = பசுவின் நெய்
பூநெய் = பூ + நெய் = பூவின் நெய் = தேன்

ஓடியாடி நன்றாக உடல் உழைப்பு உள்ள காலம் வரையில் பசுநெய்யை அதிகமாகவும், பின்னர் பசுநெய்யை குறைத்தும், எளிதில் செரிமானமாகக் கூடியதும் மருத்துவ குணம் நிறைந்ததுமாகிய தேனை அதிகமாகவும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது இப்பழமொழியின் பொருள்!!



# மாதம் ஒரு சொல்

**மின்மயம் : Digitized**



# கீற்றல்கள்

ச◌ோழமான் வியன்





Sarvin

ச◌ோழமான் வியன்



Aadhya




ச◌ோழமான் வியன்





Princessin Schloss
-Shreya Muthiah





ச◌ோழமான் வியன்

# Wildlife Wonders Around the World

*-By Jaithik Avinash, Junior Wildlife Reporter*

## Did You Know? – Super Strange Creatures!



### Two-Headed Snake

Yes, this is real – a snake with two heads!

• It happens because of a rare condition when twins don't fully separate.

• Both heads can think and move on their own!

• Sometimes the heads even fight over food.

• They usually don't survive long in the wild.


### Hydra

A tiny creature with an amazing superpower!

• Hydras can regrow their entire body if cut into pieces.

• Some scientists believe they may not age like other animals.

• They live in freshwater, like ponds and lakes.





### Slow Worm

It looks like a snake… but it's actually a lizard!

• Slow worms have no legs, which makes them look like snakes.

• Unlike snakes, they can blink their eyes.



### Yeti Crab

This crab looks like it has hairy arms like a yeti!

• It lives deep in the dark ocean near hot underwater vents.

• The "hair" on its claws actually grows bacteria, which it uses for food! • It waves its claws to farm its own food – like an underwater gardener!


### Iron-Clad Diabolical Beetle

This beetle also known as indestructible beetle and is super strong – like a tiny tank!

• It can survive being crushed by a car tire.

• Its body is built like interlocking armor plates.

• Predators find it very hard to break or eat it.



FUN ACTIVITY FOR KIDS
WHICH CREATURE SURPRISED YOU THE MOST?
DRAW IT AND GIVE IT A FUN NICKNAME!

# SHORT AND EASY GERMAN SENTENCES

| | | |
|---|---|---|
| 1 | Ich melde mich später bei dir. | *I will get back to you later.* |
| 2 | Können Sie mir den Weg zum Bahnhof zeigen? | *Can you show me the way to the train station?* |
| 3 | Ich hätte gerne ein Glas Wasser, bitte. | *I would like a glass of water, please.* |
| 4 | Wir könnten uns nächsten Samstag treffen. | *We could meet next Saturday.* |
| 5 | Das ist eine gute Idee! | *That's a good idea!* |
| 6 | Ich habe heute viel zu tun und keine Zeit. | *I have a lot to do today and no time.* |
| 7 | Ich versuche, gesünder zu leben und mehr Sport zu machen. | *I'm trying to live healthier and exercise more.* |
| 8 | Könntest du mir bitte einen Gefallen tun? | *Could you please do me a favor?* |
| 9 | Ich freue mich schon sehr auf unseren Urlaub. | *I'm really looking forward to our vacation.* |
| 10 | Vielen Dank für deine Hilfe, das bedeutet mir viel. | *Thank you so much for your help, it means a lot to me.* |

***-Guruprasanth Meyyarasu***


SHAPING YOUR FUTURE
DENIZ ÜNVER
REAL ESTATE INVESTMENTS
TRUSTED GUIDANCE. SMART INVESTMENTS. SECURE FUTURE.
Ready to invest in German real estate but not sure where to start?
Deniz Ünver Real Estate Investments makes the process simple, transparent, and fully guided, every step of the way.
WHAT WE OFFER?
1. Understand your financial goals and create a plan that fits you.
2. Share expert insights to help you invest with confidence.
3. Build a tailored strategy to find the right property.
4. Support you through every step from paperwork to purchase.
5. Stay connected even after your investment for long-term success.
PLATINUM SPONSOR
DON'T HESITATE TO CONTACT
Scan the WhatsApp QR code or message +49 176 21476492 to discuss your investment plans and discover how Deniz Ünver Real Estate Investments can help you build a secure and prosperous future.
TRANSPARENT PROCESS
TRUSTED EXPERTISE
QUALITY PROPERTIES
SECURE FUTURE

# பதில் தேடி விளையாடு

## கேள்வி 1:

நான் உனக்கு சொந்தமானவன். ஆனால் என்னை உன்னை விட மற்றவர்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். நான் யார்?

## கேள்வி 2:

என்னிடம் வாயில்லை,
ஆனால் நான் பேசுவேன்.
காதுகள் இல்லை,
ஆனால் நான் கேட்கப்படுவேன்.
நான் யார்?

## கேள்வி 3:

என்னை நீ எவ்வளவு எடுத்தாலும், நான் இன்னும் பெரியவனாகிக் கொண்டே இருப்பேன். நான் யார்?

## கேள்வி 4:

உன்னிடம் இருக்கும் போது நீ அதை பகிர்ந்தால் அது குறையாது. அது என்ன?

## பதில்கள்:

1. பெயர்
2. எதிரொலி
3. குழி
4. அன்பு

# நிழற்பதிவு



Scene - A picturesque stroll through a winter wonderland.

Where - Mummelsee, Black Forest, Germany.

When - Winter 2025-26.

How - Google Pixel 9.

– Sivakumar

COVER STORY · BLOCKCHAIN DECODED

# The 9-Page Paper That *Ended* the Middlemen

In 2008, an anonymous figure sent a slim PDF into the internet and quietly proposed abolishing centuries of financial gatekeeping. Here's what happened next — and why it matters more than ever.

KEY NUMBERS

**21M**
Maximum Bitcoin ever to exist. Not a rule — a mathematical law.

**4M**
Coins lost forever. Worth billions, gone like a digital Atlantis.

**9**
Pages in Satoshi's whitepaper — enough to challenge the world's central banks.

**180**
Countries now studying blockchain for official national use.

## 01 Our Ancient Trust Problem

For centuries, human commerce has been shackled by a single, uncomfortable fact: you cannot send digital value across an ocean without risking duplication. So we hired an army of witnesses — banks, lawyers, notaries — to be our arbiters of truth. We paid them handsomely for the privilege.

In late 2008, an anonymous programmer published a quiet, nine-page alternative. Rather than hiring a middleman, Satoshi Nakamoto proposed something radical: let the entire world be the witness at once, simultaneously, without anyone in charge.

## 02 The Ghost Who Changed Finance

It is one of history's great ironies that a revolution built on absolute transparency was launched by someone who remains invisible. By early 2009, the so-called Genesis Block was mined. The first transaction: 10 BTC sent to programmer Hal Finney.

> *"Bitcoin: A Peer-to-Peer Electronic Cash System"*
>
> SATOSHI NAKAMOTO, OCT 2008

Satoshi's anonymity is not a weakness — it is the system's greatest proof of concept. By stepping away, the creator ensured legitimacy would rest on mathematics alone, not reputation.

HOW THE CHAIN HOLDS

Each block carries a unique "hash" — a digital fingerprint — plus the hash of the block before it. Tamper with one record and the entire chain screams.




Every node in the network detects the break instantly. No single authority needed.

## 03 Digital Scarcity — and the Lost Millions

In a world defined by infinite copy-and-paste, Bitcoin introduced something that had never existed digitally: genuine scarcity. Its 21-million-coin ceiling is not a setting that can be changed by a committee — it is hard-coded mathematics. The final fraction of a coin won't be mined until the year **2140**.

Yet "circulating supply" is something of a tragic misnomer. Roughly **4 million Bitcoins** — a fortune worth tens of billions — are gone forever, locked behind forgotten private keys on discarded hard drives. Unlike a bank frozen account or a lost currency note, there is no recovery mechanism. No customer service. No government bailout. This permanence of loss is precisely what cements its status as "digital gold": the first digital asset that cannot be willed back into existence once it has slipped away.

## 04 Beyond "Magic Internet Money"

The story shifted dramatically in 2015 with the arrival of **Ethereum.** This wasn't just another coin — it introduced **Smart Contracts**: self-executing programs that fire automatically when conditions are met. The notebook became a global, autonomous computer.

The world truly sat up and paid attention in 2021 when the NFT explosion — headlined by a staggering **$69 million sale at Christie's** — proved the chain could record ownership of any high-integrity asset, not just financial units. Art, music, real estate deeds: the ledger was suddenly universal.

By 2024–25, Wall Street crossed its own Rubicon. With Bitcoin ETFs approved and BlackRock's BUIDL fund live, trillions in real-world assets are now being *tokenised* on-chain.

A BRIEF HISTORY OF THE CHAIN

**2008** — **The 9-Page Paper**
Satoshi Nakamoto publishes the Bitcoin whitepaper under a pseudonym. A ghost fires the opening shot of a trillion-dollar revolution.

**2009** — **Genesis Block Mined**
The first Bitcoin transaction — 10 BTC to Hal Finney. The ledger is open and no one is in charge of it.

**2015** — **Ethereum & Smart Contracts**
The notebook becomes a computer. Self-executing contracts fire without lawyers, without banks, without trust in any individual party.

**2021** — **The NFT Explosion**
Beeple's digital artwork sells for $69M at Christie's. The world realises blockchain can verify ownership of anything.

**2022** — **"The Merge" — 99.9% Greener**
Ethereum abandons energy-intensive mining in a single historic upgrade. The environmental argument against blockchain loses its sharpest edge.

**2024-25** — **Wall Street Crosses the Rubicon**
Bitcoin ETFs approved. BlackRock tokenises real-world assets. Layer 2 networks process millions of transactions per second. The experiment is now infrastructure.

BLOCKCHAIN IN THE REAL WORLD

### Supply Chain
Walmart uses IBM Food Trust to trace produce from farm to shelf. A contamination source that once took days to find now takes **seconds**.

### Healthcare
Estonia secures patient records on-chain — accessible by any authorised provider, owned by no single institution, tamper-proof by design.


### Real Estate
The Republic of Georgia moved its entire land title registry to blockchain, replacing archaic paper records and eliminating title fraud at scale.



## 05 The 99.9% Green Pivot

For years, "blockchain" and "environmental disaster" were near-synonyms in public debate. Proof-of-Work mining consumed electricity on the scale of medium-sized nations. Critics were not wrong.

Then came *The Merge*. In September 2022, Ethereum switched its entire validation mechanism from energy-hungry mining to a staking model — cutting its power consumption by over 99.9% overnight. It is one of the most dramatic environmental pivots any major technology platform has ever made.




> ***"Blockchain doesn't fix human greed. What it does is make the record of what happened impossible to hide."***

## 06 It Doesn't Fix Greed. It Makes Greed Visible.

Blockchain's most persistent misunderstanding is that it somehow civilises human nature. It does not. The ecosystem still grapples with scams, "rug pulls," and the messy friction of different chains trying to speak to each other.

What it provides instead is radical accountability. The ledger is open. The record is immutable. When something goes wrong — and something always goes wrong — the evidence is still there, inscribed in permanent ink, visible to everyone. That is not nothing. In fact, for a species that has spent millennia paying other humans to guard its records, it may be everything.

## 07 The Notebook That Never Forgets

We are still navigating the early chapters. The technology has survived cycles of staggering hype and equally spectacular crashes, and each time it has emerged with a larger, more sophisticated ecosystem underneath.

As identities, assets, and histories migrate from private silos onto shared, public ledgers, the question is no longer whether blockchain will reshape the architecture of trust — it already has. The question, now, is far more interesting: what does a society look like when its collective memory is written by everyone, owned by no one, and erased by no one?

We are no longer waiting for the answer. We are watching it be written — block by block, hash by hash, one immutable line at a time.

-KIRUBAKARAN

சொல்லுங்கள் வெல்லுங்கள்!
வாசகர்களுக்கான சிறப்புப் பரிசு!

அன்பான வாசகர்களே,

இந்த இதழை நீங்கள் ஆர்வத்துடன் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். உங்கள் வாசிப்பு அனுபவத்தை இன்னும் சிறப்பாக்க, ஒவ்வொரு மாதமும் ஒரு எளிய கேள்வியுடன் கூடிய பரிசுப் போட்டி நடத்துகிறோம். இந்த மாத வெற்றியாளரை அறிவிப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மாதத்தின் வெற்றியாளர் **ஜயந்தி கிருஷ்ணா** அவர்கள் ஆவார்.

**வெற்றியாளருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்!**

இந்த மாதக் கேள்வி:

**“மினி-மூவ்ஸ்” பகுதியில் அலுவலகத்தில் சிறிய பயிற்சிகள் குறித்து எத்தனையாவது குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது?**

உங்கள் பதில்களை, stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள் (email subject: Natpedu_Quiz2).

இந்த மாதம் வரும் அனைத்துப் பதில்களிலும் இருந்து குலுக்கல் முறையில் 2 வாசகர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும் ஆகவே, தவறவிடாமல் உங்கள் பதிலை அனுப்புங்கள்.

**இந்தப் பகுதி தொடர்ந்து சிறப்பாக நடைபெற, இதில் அதிகமான வாசகர்கள் பங்கேற்பது மிகவும் முக்கியமானது. ஆகையால், இதில் இடம்பெறும் கேள்விகளுக்கு உங்கள் பதில்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பி, உற்சாகமாக கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

வாசிப்போம்.. எழுதுவோம்.. வெல்வோம்!!

# இறுதியல்ல நிறைவு

## அன்பு எனும் பேராற்றல்
## - Mother Teresa அவர்களின் வழியில்



1990-களில் ஒரு மதிய வேளை, Royapuram பகுதியில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்திற்கு அன்னை தெரசா வந்திருந்தார். அப்போது ஒரு தன்னார்வலர், குழந்தைகளுக்காகச் சிவப்பாக மின்னும் புதிய ஆப்பிள்கள் நிறைந்த ஒரு கூடையைக் கொண்டு வந்தார். அந்த ஏழைச் சிறுவர்களுக்கு, ஆப்பிள் என்பது அரிதாகக் கிடைக்கும் ஒரு சிறப்புப் பழமாக இருந்தது.
சுமார் ஐந்து வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன், மிகுந்த ஆவலுடன் ஒரு ஆப்பிளை எடுத்தான். உடனே அதில் ஒரு பெரிய கடி கடித்தான். ஆனால் அடுத்த நொடியே அவன் செய்த செயல், அங்கு இருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அவன் அந்தப் பாதி கடித்த ஆப்பிளை அன்னை தெரசாவிடம் நீட்டினான்.
அங்கிருந்தவர்கள் பதற்றமடைந்தனர்.

“அன்னையிடம் போய் எச்சில் பட்ட ஆப்பிளைக் கொடுக்கிறாயே!” என்று அவனைத் தடுக்க முயன்றனர்.
ஆனால் அன்னை தெரசா புன்னகையுடன் அவர்களைத் தடுத்தார்.
அவர் தரையில் முழங்காலிட்டு, அந்தச் சிறுவனின் உயரத்திற்கு தன்னைத் தாழ்த்திக் கொண்டார். அவன் நீட்டிய அந்தப் பாதி ஆப்பிளை அன்புடன் வாங்கி, தானும் ஒரு கடி கடித்தார்.
பின்னர் மெதுவாக கூறினார்:

“இந்தக் குழந்தை எனக்குத் தனது மிச்சத்தை கொடுக்கவில்லை; அவன் தனக்குக் கிடைத்த முதல் பங்கை எனக்குக் கொடுத்துள்ளான். ஒரு தாய், தன் பிள்ளை எவ்வளவு கொடுக்கிறான் என்று பார்க்க மாட்டாள்; அவன் பகிர்ந்து கொடுக்க நினைக்கிறானா என்பதைத்தான் பார்ப்பாள்.”

தாய்மை – அன்பின் உயர்ந்த வடிவம்
தாய்மை என்பது தியாகத்தின் முகவரி.

ஒரு தாய் தன் குழந்தைக்குத் தரும் முதல் முத்தத்திலும், அன்னை தெரசா தெருவோரம் கிடந்த ஒரு அனாதைக் குழந்தைக்குத் தந்த முதல் அணைப்பிலும் —அதே புனிதமான அன்பு தான் நிறைந்துள்ளது.

இந்த Mother's Day நாளில், நாம் அன்னை தெரசாவின் வழியில் ஒரு சிறிய உறுதியை எடுப்போம்:

- பெரிய செயல்கள் வேண்டாம்
- சிறிய செயல்களைப் பெரிய அன்புடன் செய்வோம்
- நம்மைச் சுற்றியுள்ள அன்புக்காக ஏங்கும் இதயங்களுக்கு ஒரு துளி ஆறுதலாவது அளிப்போம்

நம்மைப் பெற்றெடுத்த தாயைப் போற்றுவது மட்டுமல்ல,உலகில் அன்புக்காக காத்திருக்கும் இதயங்களையும் நினைவில் கொள்வோம்.
அதுவே அன்னை தெரசாவிற்கும் உலகிலுள்ள அனைத்து தாய்மார்களுக்கும் நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும்.

அனைவருக்கும் இனிய அன்னையர் தின நல்வாழ்த்துகள்!

**--- நன்றி! வணக்கம் ! ---**

**ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு**



General Feedback

இம்மாத நட்பேடு இதழ் பற்றிய உங்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அவற்றை stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

**ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு**
**பதிப்பாளர்: மஞ்சுபார்கவி சுகுமாரன்**